04 ஏழையின் குடிலில் (திருவிருந்துப் பாடல்)
பாடல்: கிறிஸ்து ராஜன்
இசை: நிஷா
பாடியவர்: டெய்சி என்சோன்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

ஏழையின் குடிலில்
ஏழ்மையின் வடிவில்
எழுந்திட்ட பாலனே வாராயோ
நெஞ்சமே உனது மஞ்சமாய் நினைத்து
எழுந்திட்ட தேவனே வாராயோ
உணவாய் வாராயோ
உயிராய் வாராயோ
உணர்வாய் வாராயோ
உறவாய் வாராயோ

சரணம்

1. தன்னைத் தரும் அன்பே உயர் பண்பு என்று
உன்னைத் தர வந்தாய் என் தேவனே
ஜீவன் தரும் வார்த்தை வாழ்வாக வந்து
பாவம்தனை வென்றாய் என் தேவனே
உணவின் வடிவில் இறைவனே - மனம்
உறவினில் மலருதே
உனது வரவில் தேவனே - தினம்
உலகமே மகிழுதே

2. விண்ணின் மணி ஒன்று விருந்தென்று கண்டு
உன்னைப் பெற வந்தேன் என் தேவனே
பாரில் கரை சேர்க்கும் மீட்பாக வந்து
பாசந்தனைத் தந்தாய் என் ஆயனே
புதுமை புரிந்திடும் இறைவனே - புவி
மறுமையை அடையவே
அமைதி நிலவிட வேண்டுமே - எமை
அழைத்திடும் தலைவனே.

This song is prepared for **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com** **(2019)**